Name of the Newspaper: T- Hindu Date: 25/10/17

## தியேட்டர் உள்ளிட்ட பொழுதுபோக்கு அம்சங்களுடன்

# சென்னையின் புதிய அடையாளமாக 'இரட்டை கோபுரம்' அமைகிறது

■ சென்னை

சென்னை சென்ட்ரல் அருகே தலா 10 அடுக்கு மாடியுடன் ரூ. 400 கோடியில் இரட்டை கோபுரம் அமைக்கப்படவுள்ளது. இதில், தியேட்டர் உள்ளிட்ட பொழுது போக்கு அம்சங்கள் இடம்பெற வுள்ளன.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் எதிரே, பூந்தமல்லி நெடுஞ்சாலைக்கு கீழே 70,060 சதுர அடியில், சுரங்க மெட்ரோ ரயில் நிலையத்தை பிரம்மாண் டமாக அமைக்கும் பணி நடந்து வருகிறது. ரூ.400 கோடி செலவில் பல்வேறு வசதிக ளுடன் இந்த ரயில் நிலையம் அமைக்கப்படுகிறது. 2 வழித்தட மெட்ரோ ரயில்களும் இணையும் முக்கிய மையமாக இது அமையவுள்ளது.

கோயம்பேடு, எழும்பூர் வழியாக வரும் மெட்ரோ ரயில் இதில் முதல் தளத்துக்கு வரும். வண்ணாரப்பேட்டையிலிருந்து வரும் ரயில் 2-வது தளத்துக்கு வந்து இணைந்து அண்ணா சாலை வழியாக பரங்கிமலை செல்லும். சென்ட்ரலில் இருந்து அண்ணாசாலை வழியாக விமான நிலையத்துக்கு அடுத்த ஆண்டு இறுதிக்குள் மெட்ரோ ரயிலை இயக்க நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இதற்கிடையே, சென்ட்ரல் மெட்ரோ ரயில் சதுக்கம் அருகே பிரம்மாண்ட 'இரட்டை கோபுரம்' அமைக்கப்ப டுகிறது. இது தலா 10 தளங்க ளுடன் கட்டப்படுகிறது.

> ▼ வாகனங்கள் நிறுத்தும் வசதி, ஷாப்பிங் மால்கள், தியேட்டர்கள், விளையாட்டு திடல்கள், உணவகங்கள் உட்பட பல்வேறு வசதிகளும் இதில் அமைக்கப்படும். இதற்காக ரூ.400 கோடி செலவிடப்படவுள்ளது.

இது தொடர்பாக மெட்ரோ ரயில் அதிகாரிகள் கூறியதாவது:

சென்னையில் அதிகளவில் மக்கள் கூடும் முக்கிய இடங் களில் ஒன்றாக சென்ட்ரல் விளங் குகிறது. ரயில் போக்குவரத்தைத் தாண்டி அடுத்ததாக மெட்ரோ ரயில் போக்குவரத்து இங்கி ருந்து தொடங்கப்படவுள்ளது. அடுத்த ஆண்டு இறுதிக்குள் சென்ட்ரலில் இருந்து அண்ணா சாலை வழியாக விமான நிலை யத்துக்கு மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்படும்.

சென்ட்ரல் மெட்ரோ ரயில் சதுக்கம் அருகே சென்னையின் புதிய அடையாளமாக பிரம் மாண்ட இரட்டை கோபுரங்களை அமைக்கவுள்ளோம். சென்ட்ரல், பார்க் ரயில் நிலையங்கள், ரிப்பன் மாளிகை, ராஜீவ்காந்தி மருத்துவமனையில் இருந்து இந்த இரட்டை கோபுரத்துக்கு செல்ல சுரங்கப்பாதைகள் அமைக்கப்படும். தலா 10 தளங்க ளுடன் கோபுரங்களை அமைக்க வுள்ளோம். இந்த கட்டிடம் சுமார் 60 மீட்டர் உயரம் கொண்டதாக இருக்கும். இதற்கான ஒப்புதலை சிஎம்டிஏ விரைவில் வழங்க வுள்ளது.

மக்களுக்கு முக்கிய பொழுது போக்கு மையமாக இது இருக் கும். சென்னை கடற்கரைக்கு வரும் மக்கள் இந்த இரட்டை கோபுரங்களையும் காணும் வகையில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யவுள்ளோம். வாகனங்கள் நிறுத்தும் வசதி, ஷாப்பிங் மால் கள், தியேட்டர்கள், விளையாட்டு திடல்கள், உணவகங்கள் உட்பட பல்வேறு வசதிகளும் இதில் அமைக்கப்படும். இதற்காக ரூ. 400 கோடி செலவிடப்படவுள் ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.